[1970 செப்டம்பர் 5

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல்

*248 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

சென்னை நகரில் வளர்ந்துவரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புதிய திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக பின்வரும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன :—

(1) மவுண்ட்ரோடு ஜெமினி சதுக்கத்தில் ஒரு பாலம் (flyover) ஒன்று கட்டுதல்.

(2) பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையின் குறுக்கே சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகில் பாலம் ஒன்று கட்டுதல்.

(3) திருவல்லிக்கேணி, பைக்கிராப்ட்ஸ் சாலைக்கு எதிரிலுள்ள தெற்கு கடற்கரை சாலையில் சுரங்கப்பாதை ஒன்று கட்டுதல்.

(4) கடற்கரை ரயில் நிலையத்திற்கு எதிரில் வடக்கு கடற்கரைச் சாலையில் ஒரு சுரங்கப் பாதை கட்டுதல்.

*249 வினு—திரு. என். கிட்டப்பா :

திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை நகரில் ஜெமினி ஸ்டுடியோவுக்கு எதிரில் அமைக்கப்படவிருக்கும் மேம்பாலம் எப்போது வேலை துவக்கப் படவிருக்கிறது?

(இ) அதற்காகும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :(அ) இப்பணிக்கென ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டதன் மேல் பல்வேறு நிறுவனங்களிட மிருந்து வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர் இப்பணி நிறைவேற்றுவதற்காக விரைவில் மேற்கொள்ளப்படும்.

(இ) இப்பணியின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 45 லட்ச மாகும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை நகரத் திலுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, முக்கியமான சில இடங்களில் ஒரு வழிப்பாதையாக மாற்றி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சில இடங்களில் ஒரு வழிப்பாதையை போலீஸ் துறையினர் செய்து வருகிறார்கள்.

DR. H.V. HANDE : Sir, in view of the fact that some experts have already mentioned that within another decade, that is by 1980 the traffic problem in the City will become a serious problem